Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12
விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 237

வெள்ளிக்கிழமை 21 ஜூலை 2023

ஆடி 05 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054



# மோடி - ரணில் இன்று சந்திப்பு!

## 13 தொடர்பில் இந்தியா வலியுறுத்தும் மாகாணசபைத் தேர்தலும் பேசப்படலாம்



கொழும்பு, ஜூலை 21

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இரண்டு நாள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு நேற்று இந்தியாவுக்குச் சென்றுள்ள நிலையில், இன்று இந்தியப் பிரதமர் மோடிக்கும் ரணிலுக்கும் இடையில் சந்திப்பு இடம்பெறவுள்ளது. »11

## ஹெரோய்ன் வர்த்தகர் பொலிஸாரால் கைது!

யாழ்., ஜூலை 21
ஹெரோய்ன் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த நபரொரு »11



## ரணிலுக்கு இந்தியா உற்சாக வரவேற்பு!

கொழும்பு, ஜூலை 21
இரண்டு நாள்கள் பயணமாக இந்தியாவுக்குச் சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு டில்லி விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு வழங்கப்பட்டுள்ளது. »11

கெஹலியவுக்கு எதிராக

## நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஐக்கிய மக்கள் சக்தி மும்முரம்



கொழும்பு, ஜூலை 21
சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் ஐக்கிய மக்கள் சக்தி கையெழுத்திட்டது.
பொறுப்பற்றமுறையில் தரமற்ற மருந்துகள் மற்றும் »11

## 328 பொருள்களுக்கு தடைநீங்கியது!

கொழும்பு, ஜூலை 21
328 பொருள்கள் மீதான இறக்குமதித் தடைகள் நேற்று இரவுமுதல் நடைமுறைக்கு வரும் வகையில் நீக்கப்பட்டுள்ளன. »11

## குளவிக் கொட்டுக்கு இலக்காகி ஒருவர் பலி

கிளிநொச்சி, ஜூலை 21
கிளிநொச்சி - தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புன்னைநீராவி கிராம அலுவலர் பிரிவில், குளவிக் கொட்டுக்கு இலக்காகி ஒருவர் »11

அறநெறி வகுப்புகளில்

## மாணவர்களின் பங்கேற்பை உறுதிப்படுத்தல் அவசியம்

யாழ். மாவட்டச் செயலர் அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், ஜூலை 21
வெள்ளி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் அறநெறி வகுப்புகள் நடைபெறுவதை உறுதி செய்வதுடன் அதில் »11

வடமாகாணத்தில்

## தனியார் பஸ்களில் 'ரிக்கெற்' கட்டாயம்

ஓகஸ்ட் முதல் திடீர்ச் சோதனை

யாழ்ப்பாணம், ஜூலை 21
வடக்கு மாகாணத்தில் சேவையில் ஈடுபடும் சகல தனியார் பேருந்துகளும் எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் திடீர்ச் சோதனைக்குட்படுத்தப்படும். பயணிகள் தமது பற்றுச்சீட்டை உறுதிப்படுத்தவேண்டும் என்று வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை அறிவித் »11

கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி

## தொல்பொருள் திணைக்களம் அகழ்வை தாமதப்படுத்துகிறதா?

### நீதிமன்றக் கலந்துரையாடலில் பங்கேற்கவில்லை நிதிமூலத்தைக் கண்டறிவதிலும் சிக்கல் நீடிப்பு

முல்லைத்தீவு, ஜூலை 21
கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி அகழ்வுக்குரிய நிதிமூலம் இதுவரை கண்டறியப்படவில்லை. இதேவேளை - அகழ்வுப் பணிகளை முன்னெடுப்பது தொடர்பில் தொல்பொருள் திணைக்களத் திடம் மதிப்பீட்டறிக்கை கோரப்பட்டிருந்த நிலையில் »11

உங்களுக்காக கவர்ச்சியானதொரு நிகரற்ற தீர்வு

ஞாயிறு

உதயன் பத்திரிகையை பாருங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்குவழியில் தீர்வை தட்டிப்பறிக்க முயற்சி!



## அமைச்சர் பந்துல கண்டுபிடிப்பு

**கொழும்பு, ஜூலை 21**

**தாங்கள் விரும்பும் தீர்வை ஜனாதிபதியிடம் குறுக்குவழியில் தட்டிப்பறிக்கலாம் என்று சம்பந்தன் தலைமையிலான குழுவினர் முயல்கின்றனர் என்று அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-
இந்தியாவை வைத்து இலங்கையை மிரட்டலாம் எனச் சம்பந்தன் குழுவினர் எண்ணுகின்றனர். இலங்கை இறைமையுள்ள நாடு. எமக்கென்று ஒரு ஜனாதிபதி உள்ளார். அரசு உண்டு. பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் ஜனாதிபதி தலைமையிலான நாடாளுமன்றமே முடிவு செய்யும் - என்றார். (எ-22)

# உ/த பரீட்சை விண்ணப்பம் எதிர்வரும் 28இல் நிறைவு!

கொழும்பு, ஜூலை 21
2023 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 28 ஆம் திகதி வரையே ஏற்றுக் கொள்ளப்படும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.
பரீட்சைக்கான விண்ணப்பங்கள் இணையத்தளத்தில் மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் குறித்த திகதிக்குப் பின்னர் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்றும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. பரீட்சை எதிர்வரும் நவம்பர் மாதம் 27 ஆம் திகதி முதல் டிசெம்பர் மாதம் 21 ஆம் திகதி வரை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.
அதேவேளை 2022 ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் வெளியிடப்படும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். (ச-ரி3-22)

# வீதியில் இளைஞன் சுட்டுப் படுகொலை



காலி, ஜூலை 21
வீதியில் பயணித்த இளைஞரொருவர் மீது ஓட்டோவில் வந்த இருவர் துப்பாக்கிச்சூடு நடத்தியதில் அவர் உயிரிழந்துள்ளார்.
இந்தச் சம்பவம் காலியில் நேற்று முன்தினம் புதன்கிழமை நிகழ்ந்துள்ளது.
வர்த்தக நிலையத்தில் இருந்து குறித்த இளைஞன் மதிய உணவுக்காக மோட்டார் சைக்கிளில் வீடு செல்லும்போது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
உயிரிழந்தவர் பாதாளக் குழுக்களுடன் தொடர்புபட்டிருப்பதாக ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-ரி3-22)

# ஜனாதிபதியின் பொறுப்புகள் இராஜாங்க அமைச்சர்களுக்கு

கொழும்பு, ஜூலை 21
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இரு நாள்கள் உத்தியோகபூர்வ பயணமாக இந்தியாவுக்கு நேற்றுப் புறப்பட்டுள்ள நிலையில், ஜனாதிபதி வெளிநாட்டில் இருக்கின்ற காலப்பகுதியில், அவரின் கீழுள்ள அமைச்சுகளின் பொறுப்புகள் இராஜாங்க அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.
பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரான பிரமித்த பண்டார தென்னக்கோன் பதில் பாதுகாப்பு அமைச்சராகவும், நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க பதில் நிதி மற்றும் பொருளாதார நிலைப்படுத்தல், தேசிய கொள்கைகள் அமைச்சராகவும், ஏற்றுமதி ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம, பதில் ஏற்றுமதி ஊக்குவிப்பு பதில் அமைச்சராகவும், தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத், பதில் இராஜாங்க அமைச்சராகவும், சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுப பெஸ்குவல் பதில் மகளிர், சிறுவர் விவகார மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். (ஒ-26)

# ரூ. 11 மில். பெறுமதியான கஞ்சா மாமுனையில் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 21
யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு, மாமுனைப் பகுதியில் சுமார் 11 மில்லியன் ரூபா பெறுமதியான கேரளக் கஞ்சா கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் புதன்கிழமை வெற்றிலைக்கேணி கடற்படையினர் மேற்கொண்ட சோதனையில் அவை கைப்பற்றப்பட்டன.
18 பொதிகளிலிருந்து 35 கிலோ 900 கிராம் கேரளக் கஞ்சா மீட்கப்பட்டது என்றும் சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை என்றும் கடற்படையினர் தெரிவித்தனர்.
மீட்கப்பட்ட கஞ்சாவை சட்ட நடவடிக்கைக்காக மருதங்கேணி பொலிஸாரிடம் ஒப்படைக்க கடற்படையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-26)

# போதைப்பொருளுக்கு அடிமை கந்தகாட்டில் மறுவாழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 21
உயிர்கொல்லி ஹெரோய்ன் போதைப் பொருளுக்கு அடிமையான ஒருவர் கந்தகாடு போதைப்பொருள் மறுவாழ்வு மையத்துக்கு நேற்றுமுன்தினம் புதன்கிழமை அனுப்பிவைக்கப்பட்டுள்ளார் என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.
24 வயதான இளைஞரே கந்தகாடு மறுவாழ்வு மையத்துக்கு அனுப்பப்பட்டுள்ளார். குறித்த இளைஞர் நீதிமன்றினூடாக மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது போதைப்பொருளுக்கு அடிமையாகியிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டது என்றும் மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். (ச-ரி2, 125)

# தானியச்செய்கை தன்னிறைவு இறக்குமதி அவசியம் இல்லை!

## விவசாயத்திணைக்களம் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 21
பயறு, உளுந்து, குரக்கன், கௌபி மற்றும் நிலக்கடலை உள்ளிட்ட தானிய வகைகளை இந்த ஆண்டு இறக்குமதி செய்யவேண்டிய தேவையில்லை என்று விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.
2021 ஆம் ஆண்டில் இரசாயன உரத்துக்கு விதிக்கப்பட்ட தடை காரணமாக ஏற்பட்ட நெருக்கடியை அடுத்து உப உணவுப் பயிர்களின் இறக்குமதிக்காக பெரும் நிதி செலவிடப்பட்டது.
கடந்த ஆண்டு சிறுபோகத்தில் இரசாயன உரம் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டமையால் அரிசி உள்ளிட்ட ஏனைய உணவுப் பயிர்களால் நாடு தன்னிறைவு மட்டத்தை எட்டியுள்ளது.
சிறுபோக அறுவடையின் பின்னர் பயிரிடப்படும் இடைப்போகத்தின் போது இயலுமானளவு உப உணவுப் பயிர்களைப் பயிரிடுவதற்கு முன்னுரிமையளிப்பதற்காக விவசாயிகளை ஊக்கப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் விவசாயத்திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-ரி)

# மே 9 வன்முறை ஒருவர் கைது!



கொழும்பு, ஜூலை 21
கடந்த வருடம் மே மாதம் 9 ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடைய மேலும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
நிட்டம்புவ பகுதியில் சொகுசு ஜீப் வாகனத்தை தீக்கிரையாக்கிய சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். 40 வயதுடைய ரத்பொக்குனுகம பகுதியைச் சேர்ந்தவரே நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.
கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபரை மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ஒ-22)

# வேகக்கட்டுப்பாடு இழப்பு; தந்தை, மகன் உயிரிழப்பு

மதவாச்சி, ஜூலை 21
மதவாச்சிப் பகுதியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற விபத்தில் தந்தையும் மகனும் உயிரிழந்துள்ளனர். மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தபோது வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி மரமொன்றுடன் மோதியதில் இந்த விபத்துச் சம்பவித்துள்ளது.
விபத்தில் 22 வயதுடைய மகன் மற்றும் 48 வயதுடைய தந்தை ஆகிய இருவருமே உயிரிழந்துள்ளனர். விபத்து தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-ரி3.22)

# பக்கவாத மருந்துகளுக்கு வடக்கில் கடும் தட்டுப்பாடு!

## நரம்பியல் நிபுணர் சுட்டிக்காட்டு



பொருளாதார நெருக்கடியின் விளைவாக வடக்கு மாகாணத்தில் பக்கவாத நோய்க்குரிய மருந்துகளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. இது எமக்கு ஒரு துர்ப்பாக்கிய நிலை.
- இவ்வாறு யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் நரம்பியல் மருத்துவ நிபுணர் அஜந்தா கேசவராஜ் சுட்டிக்காட்டியுள்ளார்.
அவர் மேலும் கூறுகையில்,
பக்கவாத நோய்க்கு 85 வீதமான காரணமாக மூளையில் ஏற்படுகின்ற இரத்த அடைப்பு காணப்படுகிறது. யாழ்.போதனா மருத்துவமனையில் இது சம்பந்தமான மருத்துவ சிகிச்சை முறைகள் தற்போது மக்களுக்காக வழங்கப்படுகின்றன.
பக்கவாதம் ஏற்பட்ட நோயாளிகளை நான்கரை மணிநேரத்துக்குள் அந்தச் சிகிச்சை வழங்கக் கூடிய மருத்துவமனைக்கு அதாவது நரம்பியல் சிகிச்சை குழாமுள்ள மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வேண்டும். அதன் மூலம் உடனடியாக உரிய பரிசோதனை மேற்கொண்டு மூளையில் எத்தகைய தாக்கம் ஏற்பட்டுள்ளது என்பதைக் கண்டறிந்து சிகிச்சைக்குட்படுத்த முடியும்.
தற்போது வடக்கில் துர்ப்பாக்கிய நிலை தோன்றியுள்ளது. பக்கவாத நோய்களுக்குரிய மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. இது பெரும் பிரச்சினையாக காணப்படுகிறது.
ஆயினும் இந்தத் தட்டுப்பாட்டை கருத்தில் கொள்ளாது சிகிச்சை பெற வரும் நோயாளர்களுக்கு உரிய சிகிச்சைகளினூடாக தேற்றி வருகின்றோம் - என்றார். (ச-26-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு, கிழக்கு மக்களின் கோரிக்கைகள் நியாயம்!

## வனவள பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 21**



**வடக்கு , கிழக்கிலுள்ள மக்களின் காணிகளை விடுவிக்க வேண்டும் என்று முன்வைக்கும் கோரிக்கைகள் நியாயமானவை. போர் நிறைவடைந்த பின்னர் வன வள பாதுகாப்புத் திணைக்களத்தால் கையகப்படுத்தப்பட்ட காணிகள் தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகள் நிறைவடைந்ததன் பின்னர் அவை நிச்சயம் விடுவிக்கப்படும் - இவ்வாறு வனஜீவ ராசிகள் மற்றும் வனவள பாதுகாப்பு அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

1980 ஆம் ஆண்டுகளின் பின்னர் வடக்கு மற்றும் கிழக்கில் பெரும்பாலான மக்கள் தமக்கு உரிமமுடைய காணிகளைக் கைவிட்டுச் சென்றுள்ளனர். 30 ஆண்டுகளின் பின்னர் அவை காடுகளாகியுள்ளன. இவற்றில் தொடர்ந்தும் வன வள பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் வைத்திருக்க வேண்டிய காணிகளும் உள்ளன. பல காணிகள் உண்மையில் 1985இல் உரிமம் காணப்பட்ட மக்களின் இடங்களாகும். போர் காரணமாகத் தம்மால் கைவிட்டுச் செல்லப்பட்ட தமது மூதாதையரின் காணிகளை விடுவிக்கவேண்டும் என்று அந்த மக்களால் விடுக்கப்படும் கோரிக்கைகள் நியாயமானவையாகும். ஆயினும் அவை வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வன வள பாதுகாப்புத் திணைக்களத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ளன.

இது தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்குகள் நிலுவையிலுள்ளன. எனவே இது தொடர்பில் விரிவான தகவல்களை வெளிப்படுத்த முடியாது. மக்களுக்குரிய காணிகள் நிச்சயம் அவர்களிடம் கையளிக்கப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாம் உறுதியாகவுள்ளோம். அரசாங்கமும் அதே நிலைப்பாட்டையே கொண்டுள்ளது - என்றார். (எ-இ)

# மதுரை – யாழ்ப்பாணம் விரைவில் விமானசேவை

யாழ்ப்பாணம், ஜூலை 21

இந்தியாவின் மதுரையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு விரைவில் விமானசேவை ஆரம்பிக்கப்படவுள்ளது என்று இந்திய ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தியாவிலுள்ள தனியார் விமானசேவை நிறுவனங்களுடன் இலங்கை விமானப்போக்குவரத்து அதிகாரசபை இது தொடர்பான பேச்சுகளை முன்னெடுத்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சென்னைக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையிலான விமான சேவை நாளாந்தம் விஸ்தரிக்கப்பட்டுள்ள நிலையில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

தற்போது யாழ்ப்பாணத்துக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையிலான விமானசேவைக்கு கேள்வி அதிகரித்துள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து இந்தியாவின் ஏனைய பகுதிகளுக்கான விமானசேவையை விஸ்தரிக்குமாறு பல கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன.

இந்தப் பின்னணியிலேயே மதுரைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான விமானசேவை விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-ரி)



# ஹெரோய்னுடன் நடமாடியவர் கைது!

யாழ்ப்பாணம், ஜூலை 21

அரியாலை கொய்யாத்தோட்டப் பகுதியில் உயிர்கொல்லி ஹெரோய்னுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு மேற்கொள்ளப்பட்ட ரோந்து நடவடிக்கையின்போது இந்தக் கைது இடம்பெற்றுள்ளது. சந்தேகநபரை வழிமறித்துச் சோதனையிட்டபோது அவரிடமிருந்து 40 மில்லி கிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்டது. குறித்த இளைஞரை சட்டநடவடிக்கைக்குட்படுத்த மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-ரி2-125)

# கோடாவுடன் இளைஞர் கோப்பாயில் கைது!

யாழ்ப்பாணம், ஜூலை 21

கசிப்புக் காய்ச்சுவதற்குப் பயன்படுத்தப்படும் கோடாவுடன் இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கோப்பாய் மத்தியில் கைது செய்யப்பட்டுள்ளார் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் வீடொன்றைச் சோதனையிட்டபோது சந்தேகநபரிடமிருந்து 10 லீற்றர் கோடாவை பொலிஸார் மீட்டனர்.

அதேபகுதியைச் சேர்ந்த 28 வயதான இளைஞரே கைதுசெய்யப்பட்டார். சந்தேகநபருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்து நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-ரி2-125)

## வடமராட்சிக் கடலில்

# கரையொதுங்கிய சடலம் உறவினரிடம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 21



பருத்தித்துறை துறைமுகக் கடலில் கரையொதுங்கிய ஆண் ஒருவரின் சடலம் அவரது குடும்பத்தினரால் நேற்றுமுன்தினம் பொறுப்பேற்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை பருத்தித்துறை துறைமுக இறங்குதளத்தை ஒட்டியதாக ஆண் ஒருவரின் சடலம் கரையொதுங்கியது. பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி சம்பவ இடத்துக்குச் சென்று பார்வையிட்டு மேல் நடவடிக்கைக்கு உத்தரவிட்டார். அதனையடுத்து சடலம் மீட்கப்பட்டு பருத்தித்துறை மருத்துவமனையில் வைக்கப்பட்டது. இந்தநிலையில் குறித்த சடலம் மாத்தறையைச் சேர்ந்த ஜீவ அபயவர்த்தன விக்கிரமசிங்க என்பவருடையதே என அடையாளம் காணப்பட்டு, அவரது குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ச-ரி3-27)




**கம்பஸில இந்தமுறை பட்டமளிப்பு விழா இண்டையோட முடியுது. எப்பிடி எங்கட பிள்ளையள் பட்டம் வாங்குகினம் எண்டு பார்க்க பட்சியும் அந்தப் பக்கமா பறந்து போனது. வழமைமாதிரி நல்ல சனம். உள்ள நாட்டு கிறீமெல்லாம் ஒண்டும் விடாமல் பூசிமெழுகி, பிளாஸ்ரிக் சேர்ஜரி செய்தவை மாதிரி பொம்பிளைப் பிள்ளையளும், அவைக்கு நேரெதிரா ஏதோ பட்டத்தை வாங்கினாக் காணும் எண்ட கோலத்தில பெடியளும் கறுப்புக் கோட் போட்டபடி வரிசையாப் போய் பட்டத்தை வாங்கிக்கொண்டு வந்திச்சினம்.**

**ஆனால் மண்டபத்தைவிட்டு அவை வெளியில வாறதுக்குள்ள சீரழிஞ்சு, பொட்டழிஞ்சு, போட்ட மேக்கப்பும் அழிஞ்சுதான் வந்தவை. 'கப் கலெக்சன்' பண்ணுறம் எண்டபேரில, பட்டமெடுத்துட்டு வாறவையை மண்டப வாசலிலேயே வைச்சு, பொக்ஸ் அடிச்சு, அவையிட்ட இருந்த காசெல்லாம் பறிச்சுப் போட்டுத்தான் ஜூனியர்மார் விட்டவை. அவை வாங்கின ராக்கிங்கை இப்பிடித் திருப்பிக் குடுக்கினம் போல?**

**சரி. இதெல்லாம் வழமைதான். கொஞ்சம் நிழலுக்க ஒதுங்குவமெண்டு மரங்கள் உள்ள பக்கமா பட்சி வந்தால், அங்க கோயில் திருவிழாமாதிரி ஐஸ்கிறீம் கடையளும், வேற சில கடையளும் தெரிஞ்சுது. அதில தொங்கின படங்களைப் பார்க்க ஏதோ தொழிலுக்கு வழிகாட்டுற கொம்பனியள் மாதிரி தெரிஞ்சுது. அப்பிடி வழிகாட்டுறது நல்லதுதானே. பட்டமெடுத்துப் போட்டு, 'அரசாங்க வேலைதான் வேணும்' எண்டு பட்டதாரியள் எல்லாம் பட்டதடியால அடிவாங்கின பாம்பு மாதிரி படமெடுத்து ஆடாமல், தங்கட திறமைக்கேற்ற வேலையிலை சேர்ந்து, நாட்டுக்கும் எங்கட மக்களுக்கும் சேவை செய்யிறதுதானே இப்ப தேவை. நாலு வருசமா அவை படிச்ச படிப்பை, சமூகத்துக்கு பிரியோசனமா எப்பிடி மாத்தப்போகினம் எண்டதைத்தானே எல்லாரும் எதிர்பார்ப்பினம். அப்பிடி உள்ளூரில எங்கட பிள்ளையள் சொந்தக்காலில நிக்கிற மாதிரி வழிகாட்டுறதுக்குத்தான் மினக்கெட்டு உந்தக் கடையளை போட்டிருக்கினம் எண்டு பூந்து பார்த்தால், 'திக்' எண்டு போச்சுது.**

**'கனடா போக சுலப வழி'**

**'வெளிநாட்டு வேர்க் பெர்மிட்டுடன் உடன் விசா'**

**'உள்ளூரில இருந்து கஷ்டப்படாமல் வெளிநாட்டில காலாட்டிக் கொண்டிருக்க ஒரு சந்தர்ப்பம்'**

**இப்பிடியெல்லாம் எழுதி வைச்சு, கூவிக் கூவிக் கூப்பிட்டுக் கொண்டிருந்திச்சினம் அந்தக் கடையளில. ஐஸ்கிறீம் கடையளை விட இந்தமுறை 'வெளிநாட்டு வேலைவாய்ப்பு' கடையளுக்கு முன்னாலதான் கடும் சனக்கூட்டம். பட்டம் வாங்கின கனபேர் ஏதோ சாத்திரம் கேக்கப் போனவை மாதிரி 'எந்த நாட்டுக்கு எவ்வளவு கட்டினால் போகலாம்?' எண்டு விசாரிச்சுக் கொண்டிருந்திச்சினம். அப்ப இந்த நாலுவருசமும் படிச்சுக் கிழிச்சதெல்லாம், இப்பிடி வெளிநாட்டில கழுவித்துடைக்கிற வேலை செய்யத்தானோ? அதுக்குத்தான் படிச்சனியள் எண்டால் நாலு வருசத்துக்கு முதலே போயிருக்கலாமே. இப்பிடி சனத்தின்ர காசில ஓசியில படிச்சுப் போட்டு, கனடாவுக்கும், லண்டனுக்கும் நீங்கள் பறந்தால் இஞ்ச சிங்களவன் தானே வேலைக்கு வருவான். அப்ப வந்து குய்யோ முய்யோ எண்டுறது சரியோ?**

**'கண்ணீர் விட்டே வளர்த்தோம்<br>பரமேஸ்வரா!<br>கனடாவுக்குப் பாயத்<br>திருவுளமோ?'**



**- பட்சி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பல்கலையின் 37 ஆவது பட்டமளிப்பு; நேற்று இரண்டாம் நாள்



யாழ்ப்பாணம், ஜூலை 21
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 37 ஆவது பொதுப்பட்டமளிப்பு விழாவின் இரண்டாம் நாள் அமர்வுகள் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றன. பல்கலைக்கழக வேந்தர் வாழ்நாள் பேராசிரியர் சி.பத்மநாதன் தலைமையில் பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் மூன்று நாள்கள் 8 அமர்வுகளாக இந்தப் பட்டமளிப்பு விழா இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-ரி3)




## கண்கலங்க வைத்த 'பட்டம்'

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாகமான வவுனியாப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த திசாநாயக முதியன்சேலாகே ஹஷான் சகார திசாநாயக என்பவர் பிரயோக கணிதம் மற்றும் கணிப்பிடலில் விஞ்ஞானமாணிப் பட்டத்துக்கு உரியவராக்கப்பட்டுள்ளார்.
அவர் உயிரிழந்தமையால் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற 37 ஆவது பொதுப்பட்டமளிப்பு விழாவில் தேகாந்த நிலையில் அவரது தாயாரிடம் பட்டம் கையளிக்கப்பட்டது. (ச)


## விவசாயப் பயிற்சிப்பட்டறை

யாழ்ப்பாணம், ஜூலை 21
'உயிர்த்தெழும் பூமி வேளாண்மை' எனும் தொனிப்பொருளில் திருநெல்வேலியிலுள்ள யாழ்.மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் இயற்கை விவசாயம் தொடர்பிலான இருநாள் பயிற்சிப்பட்டறை நேற்று முன்தினம் புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
அதன் தொடர்ச்சியாக இயற்கை விவசாயச் செய்முறைகள் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றன.
வடமாகாணப் பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அஞ்சனாதேவி ஸ்ரீரங்கன் தலைமையில் நடைபெற்ற இந்தத் தொழில்நுட்பப் பயிற்சிப்பட்டறைக்கு வளவாளராக இந்திய விவசாய ஆர்வலரும், பல்வேறு நாடுகளுக்கு நேரடியாக விவசாயம் தொடர்பில் களப்பயணம் மேற்கொண்டு சர்வதேச பல்கலைக் கழகங்களில் சூழல்நேயமான நிலைபேறான விவசாயச் செயற்பாடுகள் தொடர்பில் கருத்தரங்குகளை நிகழ்த்தி வருபவருமான திருமதி மாரிமுத்து ரேவதி அம்மையார் பங்கேற்றார்.
இதன்போது மண்ணைப் புதுப்பித்தல், நீர் முகாமைத்துவம், வினைத்திறனான சக்திப் பயன்பாடு, பயிர் முகாமைத்துவம், அறுவடையும் அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்பங்கள், சந்தை முகாமைத்துவம் உள்ளிட்டவை தொடர்பில் விவசாய ஆர்வலர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது. (ச-ரி2-27)



## மு. சிவசிதம்பரம் எம்.பியின் நூற்றாண்டு நினைவு தினம்

யாழ்ப்பாணம், ஜூலை 21
இலங்கைத் தமிழ் அரசியலில் நீண்ட காலம் செயற்பட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் முன்னாள் துணை சபாநாயகருமான முருகேசு சிவசிதம்பரத்தின் நூற்றாண்டு நினைவு தின நிகழ்வு நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது.
நெல்லியடியில் அமைந்துள்ள அவரது சிலையடியிலும் அவரின் இல்லத்திலும் நினைவுகூரல் நடைபெற்றது.
நிகழ்வில் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. அத்துடன் உயர்கல்விக்கான புலமைப்பரிசில்களும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.
நினைவேந்தலில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், சென்னை உச்ச நீதிமன்ற சட்டத்தரணி கோபிநாத், சென்னைப் பல்கலைக்கழக பேராசிரியர் மதிவாணன், பேராசிரியர் தேவராஜ், சிவசிதம்பரம் குடும்பத்தினர் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். (ச-26)



## பனைசார் கைவினைக்கு கைப்பணிச்சங்கம் உதயம்



யாழ்ப்பாணம், ஜூலை 21
தேசிய அருங்கலைப் பேரவையின் யாழ்.மாவட்ட அலுவலகத்தால் கரவெட்டி, இமையாணன் மேற்கில் பனைசார் கைப்பணிச் சங்கம் அமைக்கப்பட்டுள்ளது.
இந்தச் சங்கம் பனைசார் கைவினைத் திறனை மேம்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.
நிகழ்வில், தேசிய அருங்கலைகள் பேரவையின் அபிவிருத்தி உத்தியோகத்தர் கிராம அலுவலர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ச-ரி-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எதிர்பார்த்த உதவி கிடைக்கும். காரியங்கள் முடிவதில் சிறு தாமதம் ஏற்படக்கூடும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். செலவுகள் ஏற்படும்.

**இடபம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தாய்வழி உறவினர்கள் மூலம் ஆதாயம் கிடைக்க வாய்ப்பு உள்ளது. உறவினர்களால் குடும்பத்தில் சிறு சிறு சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**மிதுனம் :** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். காரியங்கள் அனுகூலமாகும். உடல் ஆரோக்கியம் மேம்படும். மற்றவர்களுடன் பேசும்போது மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

**கடகம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். சிலருக்கு வீட்டில் தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படக்கூடும். எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைக்கக்கூடும்.

**சிம்மம்:** எதிர்பார்க்கும் காரியங்கள் சாதகமாக முடியும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும். மனதில் சஞ்சலம் ஏற்படும்.

**கன்னி:** பணப்புழக்கம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. மகிழ்ச்சி ஏற்படும். லாபம் எதிர்பார்த்தபடியே இருக்கும்.

**துலாம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். முக்கியமான முடிவு ஒன்றை துணிச்சலுடன் எடுப்பீர்கள். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**விருச்சிகம் :** உறவினர்கள் வழியில் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படும். கருத்துவேறுபாடு ஏற்பட்டு நீங்கும். சகோதரர்களுக்காகச் செலவு செய்ய நேரிடும்.பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**தனுசு:** மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்படும். புதிய முயற்சிகளை மேற்கொள்ளவேண்டாம். உறவுகளால் செலவுகள் ஏற்படும். குடும்பத்தில் குழப்பம் ஏற்பட வாய்ப்புள்ளது.

**மகரம்:** மனதில் தைரியம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். தந்தை வழி உறவினர்களால் காரிய அனுகூலம் ஏற்படும். சிலருக்கு எதிர்பாராத பண வரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**கும்பம்:** பிறருக்குக் கொடுத்த கடன் திரும்பக் கிடைக்க வாய்ப்பு உள்ளது. சகோதரர்கள் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். எதிர்பார்த்த காரியம் இழுபறியானாலும் முடிந்துவிடும்.

**மீனம்:** பொறுமையும் சகிப்புத்தன்மையும் அதிகம் தேவைப்படும். ஆனால், தாயின் அன்பும் ஆதரவும் மனதுக்கு உற்சாகம் தரும். வீண்மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

## இந்தியா பிராயச்சித்தம் செய்யுமா?

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகி ஓராண்டின் பின்னரே இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்ளும் வாய்ப்பு கிடைத்திருக்கின்றது. அந்தப் பயணத்துக்கு முன்னதாக தமிழ்க் கட்சிகளுடன் அவர் பேச்சு நடத்தியிருந்தார். அந்தப் பேச்சுகளின்போது நாடாளுமன்றத்தின் அனைத்துக் கட்சித் தலைவர்களும் இணங்கினால் 13ஆவது திருத்தத்தின் பொலிஸ் அதிகாரம் தவிர்ந்த ஏனையவற்றை வழங்குவது தொடர்பில் பிரதானமாகக் குறிப்பிட்டிருந்தார். 13ஆவது திருத்தத்தின் ஊடாக மத்திக்கும் மாகாணத்துக்குமான ஒருங்கிணைந்த நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை மாகாணத்துக்கே வழங்குவதற்கான நடைமுறைகளை நாடாளுமன்றத்தின் ஊடாக முன்னெடுப்பது தொடர்பிலும் தெரிவித்திருந்தார். 1987ஆம் ஆண்டு இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஒற்றையாட்சிக் கட்டமைப்புக்குள் உருவாக்கப்பட்டதே 13ஆவது திருத்தம். அந்தத் திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டு 36 ஆண்டுகளில் பல விடயங்கள் மத்தியால் கொழும்பால் தன்னிச்சையாக மீளப்பெறப்பட்டுள்ளன. இலங்கையின் உயர் நீதிமன்றம்கூட 13ஆவது திருத்தத்தில் கொழும்பு அரசால் அதிகாரங்கள் பறிக்கப்பட்டது சரி என்றே வியாக்கியானம் செய்துள்ளது. ஒற்றையாட்சிக்குட்பட்டே 13ஆவது திருத்தம் இருப்பதால் கொழும்பு அரசால் எந்தவொரு விடயத்தையும் தான்தோன்றித்தனமாகச் செயற்படுத்தமுடியும்.

இவ்வாறானதொரு நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 13ஆவது திருத்தத்தின் கீழான ஒருங்கிணைந்த நிரலை மாகாணத்துக்கு வழங்குவதாகத் தெரிவிப்பதுகூட, அழும் பிள்ளைக்கு இனிப்பைக்காட்டி 'பேய்க்காட்டுவதற்கு' ஒப்பானதே. ரணில் விக்கிரமசிங்க வழங்குவதாகக் கூறுவதை அடுத்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வெல்லும் எந்தவொரு தலைவரும் திரும்பவும் மீளப்பெறலாம். அதனாலேயே ஒற்றையாட்சிக்குட்பட்ட எந்தவொரு தீர்வும் பயனற்றது என்பதை அன்றைய கூட்டத்தில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி எடுத்துரைத்துள்ளது.

இந்தியாவும் இனியும் 13ஆவது திருத்தம் என்று ஒற்றையாட்சிக்குட்பட்ட தீர்வையே திரும்பத் திரும்ப ஒரே பல்லவி போன்று பாடிக்கொண்டிராமல் தனது கொள்கை நிலைப்பாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும். 36 ஆண்டுகளுக்கு முன்னால் உருவாக்கப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டம் தமது கண்முன்னாலே கொழும்பு அரசால் எவ்வாறு கறையான்புற்றுப்போன்று அரிக்கப்பட்டு எதுவுமில்லாது ஆக்கப்பட்டுள்ளது என்பதை உணர்ந்தாவது, ஒற்றையாட்சிக்குட்பட்ட எதுவும் சாத்தியமில்லை என்பதை ஏற்றுக்கொண்டு அடுத்த கட்டத்துக்கு இந்தியா நகரவேண்டும். 36 ஆண்டுகளாக மாறாத சிங்கள தேசத்தின் மனநிலை இனியும் மாறுமா என்பது கேள்விக்குறியே? சிங்கள தேசம் புறஅழுத்தம் காரணமாக தமிழ் மக்களுக்கு எதை வழங்கினாலும் அதை அந்த அழுத்தம் நீங்கியதும் மீளப்பறித்துக்கொள்ளும் என்பதாலேயே தமிழ் மக்கள் தனி நாடு கேட்டுப்போராடினார்கள். இப்போதும் சிங்கள தேசத்தால் மீளப்பறிக்க முடியாத அதிகாரத்தைக்கோருவதற்கும் அதுவே காரணம்.

இந்தியா இனியும் 13ஆவது திருத்தம் என்று சொல்லிக்கொண்டிருந்தால் கொழும்பின் ஆட்சியாளர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தேவைக்கு ஏற்றவாறு அதிலிருந்து அதிகாரங்களைப் பிடுங்கி எடுப்பார்கள். இந்தியா காலம்பூராவும் '13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துங்கள்' என்று சொல்லிக்கொண்டிருக்க வேண்டியதுதான். இத்தகைய போக்கில், மாற்றத்தை ஏற்படுத்த இந்தியா முனையவேண்டும். கடந்த காலங்களில் விடுதலைப்புலிகள் இருந்தபோது உள்ளக சுயநிர்ணயத்தை ஏற்றுக்கொண்டு சமஷ்டியை வழங்கத் தயாராக இருந்தவர்கள்தான் சிங்களத் தலைவர்கள். எனவே விடுதலைப்புலிகளை அழித்து ஒழித்தமைக்கு உறுதுணையாக இருந்த இந்தியா அதற்குப் பிராயச்சித்தமாகவேனும் சிங்களத் தலைவர்களை ஒரு தட்டுத் தட்டவேண்டும் என்பதே ஈழத்தமிழர்களின் எதிர்பார்ப்பாகவுள்ளது.

நாளொரு நல்வார்த்தை

"மனித வாழ்க்கை மற்றெல்லா அம்சங்களையும் விட அழகிய தோற்றம் உடையதாயிருக்கவேண்டும்"
– பிளாட்டோ






## இந்தியாவைச் சமாளிக்கத்தான் ரணில் எங்களுடன் பேச்சு

### இரா.சம்பந்தன் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 21**

**ராஜபக்சக்கள் எம்மை ஏமாற்றியது போன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் எம்மை ஏமாற்றலாம் என்று தப்புக்கணக்குப் போடுகின்றார். அதற்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டோம். இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் தமிழர் நலனில் அதிக சிரத்தையுடன் செயற்படுகின்றன என்பதை ரணில் விக்கிரமசிங்க உணரவேண்டும்.**

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் நடத்தப்பட்ட சந்திப்புத் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்குச் செல்லும் முன்னர் சந்திப்பை நடத்தியது எங்களையும் சர்வதேசத்தையும் சமாளிப்பதற்கே. எனினும் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு வேண்டும் என்பதில் நாம் உறுதியாக நிற்கின்றோம்.

முழுமையான அதிகாரப் பகிர்வுக்கு அனைத்துக் கட்சிகளும் இணங்கினால்தான் 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தலாம் என்று ரணில் விக்கிரமசிங்க கூறும் காரணத்தை ஒருபோதும் ஏற்கமுடியாது. அவர் நிறைவேற்று அதிகாரம் கொண்டவர். நாடாளுமன்றத்தின் பெரும்பான்மைப் பலத்துடனேயே அவர் பதவியில் இருக்கின்றார். அவர் நினைத்தால் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தி நாம் கோரும் அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வை வழங்கமுடியும்.

நாம் எமது நிலைப்பாட்டை இந்தியப் பிரதமர் நரேந்திரமோடிக்கு கடிதம் மூலம் அனுப்பியுள்ளோம். புதுடில்லியில் ரணில் விக்கிரமசிங்க அவரைச் சந்திக்கும்போது, இந்தியப் பிரதமர் எமது நிலைப்பாட்டை வலியுறுத்துவார் என்று எதிர்பார்க்கின்றோம் - என்றார். (எ-22)

## ரணிலை நம்பிப் பேசுவதால் எந்தப் பயனும் இல்லை

### தங்கள் ஆட்சியில்தான் தீர்வாம் சஜித்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ் மக்களை ஏமாற்றுகின்றார். அவர் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு ஒருபோதும் தீர்வு தரமாட்டார். இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ராஜபக்சக்கள் போல் ரணில் விக்கிரமசிங்கவும் தமிழர்களை ஏமாற்றுகின்றார். அவரை நம்பி பேச்சுக்குச் செல்வதால் எந்தப் பயனும் இல்லை. ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில்தான் தமிழ் மக்கள் விரும்பும் தீர்வைப் பெறமுடியும் - என்றார். (ஒ -22)

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமிழரின் ஏகப்பிரதிநிதிகள் அல்லர்!

### வீரசேகர எம்.பி. தெரிவிப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இலங்கையில் வாழும் ஒட்டுமொத்தத் தமிழர்களின் பிரதிநிதிகள் அல்லர் என்று ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேக தெரிவித்துள்ளார். அரசமைப்பின் 13ஆவது திருத்தத்துக்கு எப்போதும் எதிர்ப்புத் தெரிவிப்போம் என்று தெரிவித்துள்ள அவர், பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் அதிகாரப்பகிர்வுக்கு இடமளிக்கப் போவதில்லை என்றும் தெரிவித்துள்ளார். பொலிஸ் அதிகாரத்தை மாகாணங்களுக்கு வழங்கினால் பொலிஸ் சேவை கேலிக் கூத்தாக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

**நாளை**

22.07.2023
சனிக்கிழமை
ஆடி 06

| | |
|---|---|
| சுபநேரம் | : 03.01 - 04.31 |
| ராகுகாலம் | : 09.01 - 10.31 |

ஆடிப்பூரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18000 சேவையாளர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம்!

## சுகாதார அமைச்சர் உறுதியளிப்பு

கொழும்பு, ஜூலை 21

**டெங்கு ஒழிப்புப் பிரிவு ஊழியர்கள் உட்பட சேவையிலுள்ள தற்காலிக சேவையாளர்கள் 18ஆயிரம் பேருக்கு நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பில் விரைவில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்ற அமர்வின் போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில் இதனைக் குறிப்பிட்டார்.

சுகாதார அமைச்சின் டெங்கு ஒழிப்புப் பிரிவு ஊழியர்கள் உட்பட அரச சேவையிலுள்ள தற்காலிக ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு பேச்சு இடம்பெறுகின்றது.

இந்தவிடயம் தொடர்பில் நான்கு அமைச்சரவைப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

தற்காலிக சேவையாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பில் ஆராய்வதற்கு அமைச்சரவை உறுப்பினர்களை உள்ளடக்கிய குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய 18 ஆயிரம் ஊழியர்களை நிரந்தர நியமனம் செய்வதற்கு பிரதமர் தினேஷ் குணவர்த்தனவின் தலைமையில் கூடி இறுதித் தீர்வு எட்டப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# யானைத் தாக்குதல்களை தடுப்பதற்குப் புதிய சட்டம்

கொழும்பு, ஜூலை 21

நாட்டில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் யானை - மனித மோதலைத் தீர்க்கப் புதிய கொள்கையொன்று தயாரிக்கப்படும் என்று வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்


ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடக மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் சனத்தொகை அதிகரிப்பால் மக்கள் தமது அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் நீர்ப்பாசனச் செயற்பாடுகளில் ஈடுபடும்போது யானைகளின் வாழ்விடங்கள், அவை பயணிக்கும் பாதைகள் பாதிக்கப்படுகின்றன.

இதுவே யானைகளின் தாக்குதல்கள் அதிகரிப்பதற்குப் பிரதான காரணமாகும்.

யானை - மனித மோதலுக்கான குறுகிய, இடைக்கால மற்றும் நீண்ட காலத் தீர்வுகளைக் காண அமைச்சு பல செயலமர்வுகளை நடத்தியுள்ளது. கடந்த காலங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த அனைத்துச் செயற்பாடுகளையும் ஒருங்கிணைத்து ஒரு கொள்கை தயாரிக்கத் திட்டமிட்டுள்ளோம். அந்தக் கொள்கை சட்டமாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் - என்றார். (ச-இ)



# குழந்தைகளுக்குத் தடுப்பூசி அச்சப்படத் தேவையில்லை!

## தேசிய நோய்த்தடுப்புப் பிரிவு தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 21

குழந்தைகளுக்கான நோய்த்தடுப்பூசிகளைப் பிள்ளைகளுக்கு வழங்க பெற்றோர் கவனம் செலுத்த வேண்டும் என தேசிய நோய்த்தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் சமித்த கினிகே தெரிவித்துள்ளார்.

15 வயது வரையான குழந்தைகளுக்குக் கட்டாயமாக தடுப்பூசிகள் போடப்பட வேண்டும்.

தேசிய நோய்த்தடுப்புத் திட்டத்தின் கீழ் 15 வயது வரையான குழந்தைகளுக்கு வழங்கப்படும் தடுப்பூசிகள் தொடர்பில் எந்தவித சந்தேகமும் வேண்டாம்.

இந்தத் தடுப்பூசிகள் உலக சுகாதார ஸ்தாபனத்தினால் அங்கீகரிக்கப்பட்டவை.

நோய்த் தடுப்புக்கான உரிய தடுப்பூசிகளை பிள்ளைகளுக்கு வழங்க பெற்றோர் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றும் மருத்துவர் சமித்த கினிகே குறிப்பிட்டார். (ச-இ)

# துப்பாக்கிச் சூடு: ஒருவர் கொலை!

கொழும்பு, ஜூலை 21

வீடொன்றுக்குள் நுழைந்த மூன்று பேர் கொண்ட குழுவால் குடும்பத் தலைவர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார் என்று அம்பலாந்தோட்டைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் அம்பலாந்தோட்டையில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடந்துள்ளது. வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்த மூவர் குறித்த குடும்பத் தலைவர் மீது துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

சந்தேகநபர்களை கைது செய்வதற்கு சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முடுக்கிவிட்டுள்ளனர். (ச-ரி3-22)

# ஜனாதிபதி மாளிகையில் 17 மில். வாக்குமூலம் வழங்கும் கோத்தா

கொழும்பு, ஜூலை 21




ஜனாதிபதி மாளிகையில் பொதுமக்களால் கண்டெடுக்கப்பட்ட 17.85 மில்லியன் ரூபா தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவிடம் எதிர்வரும் 27ஆம் திகதி வாக்குமூலம் பதிவு செய்யப்படவுள்ளது என்று இலஞ்ச ஊழல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அமைப்பொன்று மேற்கொண்ட முறைப்பாட்டுக்கு அமைய இந்த விடயம் தொடர்பில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றது. ஜனாதிபதி மாளிகையிலிருந்து மீட்கப்பட்ட பணம் இலஞ்சம் தொடர்பான குற்றங்களுக்குள் அடங்கக்கூடியதா என்பது தொடர்பாக விளக்கமளிப்பதற்காக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் அதிகாரிகள் நீதிமன்றத்தில் முன்னிலையாக வேண்டும் என்று கொழும்பு கோட்டை நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

அதேவேளை, இந்த விசாரணைகள் தொடர்பாகக் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு அளித்த இரண்டாவது வாக்குமூலத்தில் ஆர்ப்பாட்டக்காரர்களால் வீடுகளை இழந்தவர்களுக்கு வழங்குவதற்காக பொதுஜனபெரமுனவின் ஆதரவாளரான வர்த்தகர் ஒருவர் வழங்கிய பணம் அது என முன்னாள் ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார். ஜனாதிபதி மாளிகைக்குள் 'அரகலய' ஆர்ப்பாட்டக்காரர்கள் நுழைந்ததைத் தொடர்ந்து ஆவணங்கள் பல காணாமற்போயுள்ளதால் யார் அந்தப் பணத்தை வழங்கினார் என்பதை தெரிவிக்க முடியாத நிலை உள்ளது என்றும் அவர் தனது வாக்குமூலத்தில் குறிப்பிட்டிருந்தார். (எ-இ)

# மகனுக்குத் திருமணம் சர்ச்சையில் ரோஹித!

கொழும்பு, ஜூலை 21

தனது மகனின் திருமணம் தொடர்பில் எழுந்த சர்ச்சை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன சபாநாயகரிடம் முறைப்பாடு ஒன்றை சமர்ப்பித்துள்ளார்.

சமூக வலைத்தளங்களில் தனது மகனின் திருமணம் தொடர்பில் பொய்யுரைக்கப்படுகிறது.

20 வயதாகும் தனது மகனான ஆயேஷ் அபேகுணவர்த்தனவுக்குத் திருமணம் பெரும் பொருள் செலவில் நடைபெற்றுள்ளது.

மணமகனும் மணமகளும் ஹெலிகொப்டரில் வந்தனரெனவும் அவர்களை அழைத்துவர சொகுசு வாகனங்கள் பயன்படுத்தப்பட்டன என்றும் சமூகவலைத்தளங்களில் வதந்தி பரப்பப்படுகின்றது.

எனது மகனுக்கு இன்னமும் திருமணம் இடம்பெறவில்லை. அவர் இன்னும் சட்டக்கல்லூரியில் சட்டம் பயில்கிறார்.

இந்தப் பொய்யான குற்றச்சாட்டுகள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் தனது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# அரசியல் மயப்படுத்தப்படும் வெளிநாட்டுத் தூதரகங்கள்!

இலங்கையின் சுமார் 60 வெளிநாட்டுத் தூதரகங்கள் தகுதிவாய்ந்த இராஜதந்திரிகள் இல்லாமல் இயங்குகின்றது. இதனால் வெளிநாட்டுச் சேவையின் 22 பிரிவுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இலங்கையின் வெளிநாட்டுச் சேவை அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 60 தூதரகங்களில் தகுதிவாய்ந்த இராஜதந்திரிகள் இல்லை.

268 அதிகாரிகள் இருக்க வேண்டிய இடத்தில் 166 அதிகாரிகளே பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

இதனால் வெளிநாட்டுச் சேவையின் 22 பிரிவுகள் பாதிக்கப்பட்டுள்ளன. சில தூதரகங்களில் அளவுக்கதிகமான உத்தியோகத்தர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். அதனால் சில தூதரகங்களில் உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை காணப்படுகிறது.

வொஷிங்டன், மொஸ்கோ உள்ளிட்ட முக்கியமான நகர தூதரகங்களில் அரசியல்வாதிகளுக்கு நெருக்கமானவர்கள் பிரதான பதவிகளில் அமர்த்தப்பட்டுள்ளனர் - என்றுள்ளது. (ச-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
28.07.1975

மறைவு
02.08.2022

அமரர்

## திரு. சிவஞானசுந்தரம் ராஜ்குமார் (கண்ணன்)

### (கரிகணன் அச்சக உரிமையாளர் - யாழ்ப்பாணம்)


ஆண்டு ஒன்று கடந்தது எமை நீர் நீங்கி
ஆறவில்லை மனம் இன்னும் எமக்கு இனியும் ஆறப்போவதும் இல்லை
ஏன் அப்பா சென்றீர்கள் ?? எமை விட்டு ? செய்வதறியாது நிற்கின்றோம்
வழி நடத்த தலைவன் இல்லாது களையிழந்தது
நம் வீடு - உம் குரல் ஒலிராது மௌனித்தது நம் வீடு மட்டுமல்ல எம் மனங்களும்...
கண்ணா வருவான் என காத்திருக்கும் உன் அன்னையவள்...
என் சொல்வோம் ஆறுதல் தனை? உனை மணமுடித்த நொடிமுதல்
உன் அடியொற்றி உன் நிழலென தொடர்ந்தேன் உந்தன் பின்னே
கனவாய் கலைந்து போனாய் ஏனோ? தொலைத்து விட்டேன் உன்னை...
திக்குத் திசை இன்றி தனித்து விட்டேன் என் கணவா...
நீர் விட்டுச்சென்ற உன் உயிர் மூச்சாம் கரிகணன் என்றும்
உம் நாமம் ஒளிரச்செய்யும் ஆண்டுகள் கடந்தாலும்
ஆறாத மனத்துடன் என்றும் உம் நினைவாய்.

17/9, பிள்ளையார் வீதி,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம்
08 • 12 • 1946

மறைவு
19 • 07 • 2023

## கந்தையா சுப்பிரமணியம்
### (ரக்ரர் மணியம்)

குகன் மில்லடி கல்வயல் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சுப்பிரமணியம் (ரக்ரர் மணியம்) 19.07.2023 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - அன்னப்பிள்ளை தம்பதியரின் மகனும். காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் சின்னத்தங்கம் தம்பதியரின் மருமகனும். சரஸ்வதி (பூமணி) இன் அன்புக் கணவரும். காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புச் சகோதரரும். ஜெகசோதி. சறோஸ்மலர். காலஞ்சென்ற சிவராசா . தங்கமணி. சிவகுமார். காலஞ்சென்ற ஜெயக்குமார் ஆகியோரின் மைத்துனரும். பூபாலன். சுதந்தன். சுமதி. சுகந்தி. சுரேந்திரன். சித்திரா. சுரேன் ஆகியோரின் அன்புத் தந்தையும். வதனி. வீனா. சிவனேஸ்வரன். கிரிதரன். றஜிபா. சாந்தரூபன். லாவண்யா. சுகேசன். கேதாரகௌரி ஆகியோரின் மாமனாரும். சதுசன். கஜானா. அனிக்கா. ஆதிரா. சமீரன். சரண் கிருஷான். அனோஜன். சுபுன். மிதுஷா. சனுஷா. ஆருஷா. அஸ்லினா. அஸ்னிக்கா. நிவிக்கா. லித்விக்கா. சௌமியா. சஞ்சனா. நர்த்தனா. யாதனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவரர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (23.07.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவடல் தகனக்கிரியைக் காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

குகன் மில்லடி,
கல்வயல், சாவகச்சேரி.

தொடர்பு:
**077 524 2976**

தகவல்:
குடும்பத்தினர்

(cs51241) (N-1)

# சிவதொண்டர்கள் தேவை

கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரமத்துக்கு சிவதொண்டுகள் ஆற்றவும், நன்கு சமையல் வேலை தெரிந்த, குடிப்பழக்கம் அற்ற ஒருவர் தேவை. சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும். விண்ணப்பங்கள் யாவும்.

**அறங்காவலர், நிர்வாக உறுப்பினர்கள், மகாதேவ ஆச்சிரமம், ஜெயந்திநகர், கிளிநொச்சி.**

என்ற முகவரிக்கு 31.07.2023 இற்கு முன் அனுப்பி வைக்கவும். (CS/51324)AH-1

## டொலர் 330 ரூ.

இலங்கை மத்திய வங்கியின் நாணய மாற்றுப் பெறுமதியின் அடிப்படையில் அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு நிகர்ப் பெறுமதியாக 316.30 ரூபா நேற்று நிர்ணயிக்கப்பட்டது. (ம)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

எம் இனிய உறவுகளே. 20.07.2023 இடம்பெற்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 37ஆவது பட்டமளிப்பு விழாவில் யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் அங்கத்தவரான

## சென்பீற்றர்போல் ஸ்கொலஸ்ரிக்கா சொய்சா




அவர்கள் பொதுக்கலைமாணி பட்டதாரியாக மகுடம் சூடி எமக்கு பெருமை சேர்த்துள்ளார். இவருக்கு எமது வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்து மகிழ்வதோடு கண்ணிழந்தவர்களின் அறிவுக்கண் திறக்க எமது **கந்தசாமி கல்வி நிதியத்திற்கு** நன்கொடைகளை வாரி வழங்கி வருகின்ற வள்ளல்களுக்கு எமது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்து மகிழ்கின்றோம். 47 வருடங்களாக பார்வையற்றவர்களுக்காக பணியாற்றிவரும் எமது நிறுவனத்தின் பட்டதாரி பட்டியல் இன்று 95 ஆக நீள்கின்றது. உறவுகளே தொடர்ந்தும் ஊனக்கண்ணிழந்தவர்களின் அறிவுக் கண் திறக்கவும் எமது சமூகப்பணி சிறக்கவும் உங்களது அன்பளிப்புக்களை தொடர்ந்தும் வாரி வழங்குமாறு தங்களைத் தாழ்மையுடன் வேண்டுகிறோம்.

(CS 25576) A-1

வாழ்த்துவோர்:-

**யாழ். விழிப்புலனற்றோர் சங்கம்**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
**17.02.1958**



விண்ணில்
**01.08.2022**

## அமரர் சுப்பிரமணியம் இலட்சுமணன்

(ஓய்வுபெற்ற உப அதிபர் மற்றும்
இணைந்த கணித ஆசிரியர்- யாழ். இந்துக் கல்லூரி)

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய்
பல மாணவர்களின் கல்வியில் கலங்கரை விளக்காய்
எம் வாழ்க்கைப் பாதையின் வழிகாட்டியாய்
நம் குடும்பத்தின் வளர்ச்சிக்காய் அயராது உழைத்து
எங்கள் வாழ்க்கையை செழுமைப்படுத்திய
எங்கள் அன்புத் தந்தையின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
காலங்கள் எத்தனை சென்றாலும் உங்கள் நினைவு சிறிதளவேனும்
குறையாது எங்கள் நினைவுகளில் எப்போதும் வாழ்ந்துகொண்டே இருப்பீர்கள்

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

442,K.K.S. Road, Jaffna.
077 363 6436

என்றும் குன்றா உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்

(cs.51328) (N.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி புண்ணியமூர்த்தி ஜெயநாயகி

தோற்றம்
03.04.1942

மறைவு
17.07.2023



உடுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், திருகோணமலை மற்றும் உடுவில் தெற்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி புண்ணியமூர்த்தி ஜெயநாயகி கடந்த (17.07.2023) திங்கட்கிழமை மாலை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகராசா - சிதம்பரம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ஆறுமுகம் புண்ணியமூர்த்தியின் பாசமிகு துணைவியாரும், காலஞ்சென்றவர்களான மகேசன், சீதாலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், நாகலட்சுமி, பத்மநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஜெயரூபன் (லண்டன்), இன்பரூபி, இன்பமலர், ஜெயமூர்த்தி (பிரான்ஸ்), ஜெயரங்கன் (லண்டன்), இன்பவேணி, ஜெயபவன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், யோகராசா, மேனேந்திரா, மாலினி, நிரஞ்சலா, ஷர்மிளா, சாமந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும், பவித்திரன் - யதுஷனா, ஜெனுஷன், பிரகதன், ஹரினி, நிஷாயினி, தருன், சாரங்கன், ஆரபி, பாவனா, கிருஜன், சகானா, ஹரிஷரன், ஜஸ்விதா, நாகர்ஜுனா, ஷதுர்விகா, கவிநயன், அதிஷனா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (23.07.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் ("ஜெயவாசம்", உடுவில் தெற்கு, மானிப்பாய்) நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"ஜெயவாசம்"
உடுவில் தெற்கு, மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.


076 092 0173, 070 236 4358

(CS/513277)AH-1

# மரண அறிவித்தல்

மலர்வு
08.12.1952

உதிர்வு
20.07.2023



## சின்னட்டி முத்துலிங்கநாதன் (முத்து மாஸ்ரர்)

(ஓய்வுபெற்ற முகாமைத்துவ உதவியாளர் பிரதேச செயலகம், ஊர்காவற்துறை மற்றும் பளை)

அரியாலை மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்து மாஸ்ரர் என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்படும் சின்னட்டி முத்துலிங்கநாதன் அவர்கள் நேற்று (20.07.2023) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னட்டி பொன்னம்மா தம்பதிகளின் இளைய புதல்வனும், காலஞ்சென்றவர்களான துரைராஜசிங்கம் கமலாவதி தம்பதிகளின் அன்பு மருமகனும், கிருஸ்ணகுமாரியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான லிங்கேஸ்வரநாதன், செல்வேஸ்வரி, புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு சகோதரனும், இந்திரகுமாரி, சந்திரகுமாரி, காலஞ்சென்றவர்களான சிவராசா, கலாவதி மற்றும் அன்ரன், ஜோன் அன்ரன் ஆகியோரின் மைத்துனரும், பிரசாந் (உத்தியோகத்தர்- இலங்கை வங்கி), ரவிசாந் (தபால் அதிபர்- கண்டி), றுக்சாந் (இயக்குநர்- DBMS கணினி நிறுவனம், சாவகச்சேரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நிரோஜினி (விலை மதிப்பீட்டுத் திணைக்களம், யாழ்ப்பாணம்), நிசானி (ஆசிரியர்- DBMS கணினி நிறுவனம், சாவகச்சேரி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், வகிஷா (புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்), மிதுலா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), சஸ்மிதா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.07.2023) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் இல:50, கலைமகள் வீதி, அரியாலை மேற்கில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பிரசாந்: 077 634 3696
ரவிசாந்: 076 083 6417
றுக்சாந்: 077 295 3325

தகவல்:
குடும்பத்தினர்

# கண்ணீர் அஞ்சலி..

தோற்றம்
24.03.1966

மறைவு
20.07.2023



களபூமி இந்து இளைஞர் மன்றத்தின் வளர்ச்சிக்கு அர்ப்பணித்த
எமது முன்னாள் தலைவர்

## அமரர் வேலுப்பிள்ளை சற்குணராசா (ராசன்)

அமைதியின் உருவமாகவும் அடக்கத்தின் இருப்பிடமாகவும் பண்பின் பெருந்தகையாகவும்
பாசத்தின் உறைவிடமாகவும் எம்மத்தியில் அன்பு ஒளியாக இருந்த உத்தமரே!!
மண்ணோடு உங்கள் பூவுடல் மறைந்து விட்டாலும் உங்கள் நினைவுகள் எங்கள்
இதயங்களில் இருந்து ஒருபோதும் மறைவதில்லை.

ஆரம்ப காலத்தில் இந்து இளைஞர் மன்றத்தின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டவர். அன்னாரது திடீர் மறைவு ஆழ்ந்த கவலையை தருகிறது. ராசன் அண்ணாவின் ஆத்மா சாந்தியடைய திக்கரை முருகனை பிரார்த்திப்பதோடு, அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி!!!

பிரிவால் துயருறும்
களபூமி இந்து இளைஞர் மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதியை ஏற்படுத்தவே பொங்கலைத் தடுத்தனராம்

## நீதிமன்றத்தில் நேற்று பொலிஸார் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஜூலை 21

குருந்தூர்மலையில் ஆதிசிவனுக்குப் பொங்கலிட்டு வழிபாடுகளை மேற்கொள்ளச் சென்ற தமிழர்கள் மீது பொலிஸார் அடாவடித்தனமாகத் தாக்குதல்களை நடத்தியமையும், பௌத்த தேரர்கள் தலைமையிலான குழுவொன்று தமிழர்களின் வழிபாடுகளைக் குழப்பியமையும் சர்ச்சையாகியுள்ள நிலையில், 'அமைதியை ஏற்படுத்துவதற்காகவே பொலிஸாரால் பொங்கல் வழிபாடுகள் தடுக்கப்பட்டன' என்று நீதிமன்றத்தில் பொலிஸார் நேற்றுத் தெரிவித்துள்ளனர்.

குருந்தூர்மலையில் இடம்பெற்ற அடாவடித்தனங்கள் தொடர்பாக முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில், கடந்த 14ஆம் திகதி முறைப்பாடு வழங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து மனித உரிமைகள் ஆணைக்குழுவிடமும் முறையிடப்பட்டது. இந்த வழக்கு நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டபோதே 'அமைதியை ஏற்படுத்துவதற்காகத்தான் பொங்கல் வழிபாடுகள் தடுக்கப்பட்டன' என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சைவத் தமிழ் மக்களின் பொங்கல் வழிபாடுகள் தடைசெய்யப்பட்டமை தொடர்பிலான புகைப்படங்கள், மனித உரிமை ஆணைக்குழு மற்றும் பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் என்பவற்றை நீதிமன்றில் சமர்ப்பித்து, குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலய அடியவர்கள் சார்பில் மன்றில் தோன்றிய சட்டத்தரணிகள் தமது சமர்ப்பணங்களை முன்வைத்திருந்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை, தகவல்களைத் தொல்லியல் திணைக்களத்திடமிருந்தும் பெறவேண்டியதொரு தேவையிருப்பதால், குறித்த நாளில் குருந்தூர்மலையில் இடம்பெற்ற விடயம் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு தொல்லியல் திணைக்களத்துக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது. தொல்லியல் திணைக்களத்தின் அறிக்கைக்காக எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 8ஆம் திகதிக்கு வழக்குத் தவணையிடப்பட்டுள்ளது.

(அ-ம-246)


**மாபிள் வேலை**

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில்
அழகாக மாபிள் பதித்து தரப்படும்.
ஒரு சதுர அடி - 85 ரூபாய்

**077 334 1281**

**விற்பனை பிரதிநிதி தேவை**

பொதி செய்யப்பட்ட கோழி
இறைச்சி சார்ந்த உணவுப்
பொருட்களை விற்பனை செய்ய
விற்பனை பிரதிநிதி தேவை

**077 550 0444**


# 13ஆவது திருத்தம் தீர்வாக அமையாது

## சிவில் சமூகங்களின் இணையம் இந்தியப் பிரதமருக்குக் கடிதம்

கொழும்பு, ஜூலை 21

அரசமைப்பின் 13ஆவது திருத்தம், இனப்பிரச்சினைக்குத் தீர்வல்ல என்பதை வலியுறுத்தி, இந்தியப் பிரதமர் மோடிக்கு சிவில் சமூகங்களின் இணையம் கடிதம் அனுப்பியுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் உள்ளதாவது:-

நாங்கள் வடக்கு - கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 100 சிவில் அமைப்புகள் ஒன்றிணைந்து 2010ஆம் ஆண்டு முதல் ஓர் இணையமாகச் செயற்பட்டு வருகிறோம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியப் பிரதமருடன் இனப்பிரச்சினைக்குத் தீர்வு தொடர்பாக உரையாடவுள்ள சந்தர்ப்பத்தில் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஆனால், தமிழ் மக்கள் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக 13ஆவது திருத்தத்தை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்பதே எமது கருத்து.

13ஆவது திருத்தத்தின் கீழ் ஆளுநருக்கு உச்சபட்ச அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஆளுநர் எப்போதும் மத்திக்கு சார்பானவராகவே இருப்பார். மாகாணசபைகள் சட்டங்களை இயற்றும்போது அதை இழுத்தடிக்க ஆளுநரால் முடியும். 1992ஆம் ஆண்டு ஜனாதிபதி பிரதேச செயலர்களை மத்தியின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தார். மாகாணங்களுக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரங்களை பறித்தெடுத்தார். அரச அதிகாரிகளை இடமாற்றம் செய்யும் அதிகாரம் ஆளுநரிடம் (மத்தியிடமே) உள்ளது. தேசிய கொள்கைகளை வகுக்கும் அதிகாரம் மத்தியிடமே உள்ளது.

இந்தியாவில் மூன்று முக்கியமான விடயங்கள் மாநிலங்களிடமே உள்ளன. சட்டம் ஒழுங்கு, கல்வி, காணி போன்ற அதிகாரங்கள் மாநிலங்களிடமே உள்ளன. ஆனால், இலங்கையில் இந்த விடயங்களில் மாகாணசபைக்கு சொற்ப அதிகாரங்களே வழங்கப்பட்டுள்ளன அல்லது இல்லையென்றுகூடச் சொல்லலாம். வடக்கு - கிழக்கு மாகாணங்களில் ஆளுநர்கள் தமது உச்சபட்ச அதிகாரத்தைப் பயன்படுத்துகின்றனர், இதுதான் கடந்தகால அனுபவம்.

இலங்கையில் ஒரு நிரந்தர சமாதானம் ஏற்பட வேண்டுமாக இருந்தால், நாங்கள் சுயநிர்ணய உரிமையை அனுபவிக்க ஏதுவாக சமஷ்டிக் கட்டமைப்புக்கு இலங்கையை இந்திய அரசாங்கம் வலியுறுத்தவேண்டும் - என்றுள்ளது.

(அ-ம-6)

# மகாசங்காபிஷேகம்

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர், கண்ணகியம்மன் ஆலயம் ஆகியவற்றின் வருடாந்த ஆடிப்பூர மகா சங்காபிஷேகம் நாளை சனிக்கிழமை இடம்பெறவுள்ளது என்று ஆலயப் பரிபாலனசபையினர் அறிவித்துள்ளனர்.

(அ-ம)


**பெயர் மாற்றம்**

மணல்தெரு, கம்பர்மலை உடுப்பிட்டியில் வசிக்கும் **லலிதாமணி** ஆகிய நான் எனது பெயரினை இன்று முதல் **வனிதாமணி** என மாற்றிக் கொள்வதோடு சகல ஆவணங்களிலும் அவ்வாறே கையொப்பமிடுவேன் என இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத் தருகின்றேன்

**J. வனிதாமணி**


# ஊர்மக்கள் நிதியில் மயானத்துக்கு வேலி

## மட்டுவிலில் முன்மாதிரி

சாவகச்சேரி, ஜூலை 21

சாவகச்சேரி மட்டுவில் வடக்கு ஊரிப்பிட்டி இந்து மயானப் புனரமைப்புக்காக ஊர்மக்களிடம் திரட்டப்பட்ட நிதி மயான அபிவிருத்திக் குழுவிடம் நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டது.

நீண்டகாலமாக புனரமைக்கப்படாமல் காணப்பட்ட குறித்த மயானத்தைப் புனரமைக்கும் நோக்கில் அண்மையில் மயான அபிவிருத்திக் குழு ஊர் மக்களால் தெரிவு செய்யப்பட்டது.

முதற்கட்டமாக ஊர்மக்களின் நிதிப்பங்களிப்பில் மயானப் பகுதி சிரமதானம் செய்து வேலி அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

அதற்கமைய 3 இலட்சம் ரூபா நிதி திரட்டப்பட்டநிலையில் மயான வளாகத்துக்கு சுற்றி வேலி அமைக்கப்படவுள்ளது என்று நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

(ச-9)


**தவறவிடப்பட்டுள்ளது**

திருநெல்வேலி கிழக்கு, இராமலிங்கம் வீதிக்கும், நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரிக்கும் இடையில் கடந்த (19.07.2023) புதன்கிழமை காலை 7.00 - 8.30 இடைப்பட்ட நேரத்தில் தேசிய அடையாள அட்டை (703130712V), சாரதி அனுமதிப்பத்திரம் உட்பட முக்கிய ஆவணங்களுடன் கறுப்பு நிற பணப்பை ஒன்று தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தந்து உதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**077 2592 116, 021 222 1720**


# சிறுமி வன்கொடுமை கைதானார் தேரர்!

அம்பன்பொல - மச்சவாச்சியில் 11 வயதுச் சிறுமியை பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் தேரர் ஒருவரை அம்பன்பொல பொலிஸ் சிறுவர் மற்றும் பெண்கள் பணியகத்தினர் கைதுசெய்துள்ளனர்.


தரம் - 7 இல் கல்வி கற்கும் சிறுமியே துஷ்பிரயோகத்துக்குட்படுத்தப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. சிறுமி மருத்துவப் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

சந்தேகநபரான தேரரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

(ச-ரி2)

## மரண அறிவித்தல்

பிறப்பு 14 . 09 . 1942



இறப்பு 20 . 07 . 2023

**ஆறுமுகம் தர்மலிங்கம்**

**(விசுவமடு பரவல் நீர்ப்பாசன சங்க செயலாளரும் (R.D.S), கிராம அபிவிருத்தி சங்க தலைவர் ப.நோ.கூட்டுறவு சங்கம் இயக்குனர்சபை முன்னாள் உறுப்பினர்.)**

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும். 183 விசுவமடு கிழக்கை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் தர்மலிங்கம் நேற்று (20.07.2023) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் பார்வதிப்பிள்ளை தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் கதிராசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் பாசமிகு கணவரும், கந்தையாவின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.07.2023) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் 2ம் பகுதி திருவையாற்றில் (பேறாமகன் இல்லம் - ஜனா) நடைபெற்று, பி.ப 2.00 மணியளவில் விசுவமடு ப.நோ. கூட்டுறவு சங்கத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, தகனக்கிரியைக்காக 12ம் கட்டை விசுவமடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: பரமேஸ்வரி (மனைவி)
ஜனா (பேறாமகன்)
T.P:077 524 8450

2ஆம் பகுதி, திருவையாறு,
கிளிநொச்சி.

(CS 25580) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர்களின்...

மாணவர்களின் பங்கேற்பையும் உறுதிப்படுத்தவேண்டும் என யாழ். மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன், பிரதேச செயலர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் பிரதேச செயலர்களுடன் நேற்றுக் கலந்துரையாடல் நடைபெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

'வெள்ளிமற்றும்ஞாயிற்றுக்கிழமைகளில் தரம் 9 வரையுள்ள மாணவர்களுக்கு கற்றல் செயற்பாடுகள் தனியார் கல்வி நிறுவனங்களில் முன்னெடுக்கப்படக் கூடாது. அதேபோன்று 'சூம்' ஊடான வகுப்புகள், பிரத்தியேக வகுப்புகள் என்பனவும் நடைபெறக்கூடாது. அதை பிரதேச செயலர்கள் கண்காணிக்க வேண்டும். அறநெறி வகுப்புகள் கிராமங்களில் நடைபெறுவதை ஊக்குவிக்க வேண்டும். இதுவரை அறநெறி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டிருக்காவிட்டால் அதனை உடனடியாக ஆரம்பிக்கவேண்டும். ஆலயங்களில் நடைபெறும் கலை நிகழ்வுகளில் மாணவர்களின் பங்கேற்பை ஊக்குவிப்பதுடன் அவர்களுக்கான வாய்ப்புகளை அதிகரிக்கவும் வேண்டும்' என்று மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன் அறிவுறுத்தியுள்ளார். (அ-ஒ,5)

## ஹெரோய்ன்...

வர் ஐந்து மில்லிகிராம் ஹெரோய்னுடன் யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸாரால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டார். இவர்நீண்டகாலமாகஹெரோய்ன் வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்த நபர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் - குருநகர் பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். இவரைக் கைதுசெய்வதற்கு ஜூன் மாதமே முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும், அவர் தப்பியோடி கோப்பாய்ப் பகுதியில் மறைந்திருந்தார். இந்த நிலையிலேயே அவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபருக்கு எதிராக நீதிமன்றத்தில் ஏற்கனவே பத்துக்கும் மேற்பட்ட வழக்குகள் நிலுவையில் உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## மோடி...

ஜனாதிபதியாக ரணில் பொறுப்பேற்று இன்றுடன் ஓராண்டுநிறைவடைகின்றது. எனினும் ரணில், ஜனாதிபதியாக இப்போதுதான் முதன்முதலாக இந்தியாவுக்குப் பயணப்பட்டுள்ளார். இதனால், இந்தப் பயணமும், மோடியுடனான சந்திப்பும் முக்கியத்தும் மிக்கதாகப் பார்க்கப்படுகின்றது.

இலங்கையின் பொருளாதார நெருக்கடியின்போது இந்தியா வழங்கிய உதவிகளுக்காக ரணில் நன்றி தெரிவிப்பார் என்று நம்பப்படுகின்றது. அத்துடன், கடன் மறுசீரமைப்பு அவகாசம் தொடர்பிலும் இரு நாட்டுத் தலைவர்களும் பேச வாய்ப்புள்ளது.

ரணிலிடம் தமக்காக வலியுறுத்த வேண்டிய விடயங்கள் தொடர்பில், தமிழ்க் கட்சிகள் மோடிக்குக் கடிதம் எழுதியுள்ள நிலையில், இந்தக் கடிதங்களின் வலியுறுத்தலும் மோடி - ரணில் இடையிலான சந்திப்பில் எதிரொலிக்க வாய்ப்பு இருக்கவே செய்கின்றது.

இதைவிட பல்வேறுபட்ட முக்கியமான ஒப்பந்தங்களில் இரு நாடுகளின் தலைவர்களும் இன்று கைச்சாத்திடவுள்ளனர். கிட்டத்தட்ட ஆறு ஒப்பந்தங்களில் அவர்கள் கைச்சாத்திடலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

புதுப்பிக்கத்தக்க சக்தி ஒப்பந்தம், இரு நாடுகளுக்கு இடையில் கடலூடனான எரிபொருள் குழாய் மற்றும் மின்சாரக் கேபிள் இணைப்புகளை ஏற்படுத்துவதற்கான ஒப்பந்தம் மற்றும் திருகோணமலையில் பொருளாதார வலயத்துக்கான ஒப்பந்தம், இலங்கைக்குத் தேவையான மருந்துப் பொருள்களை நேரடியாகக் கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தம் மற்றும் பால் உற்பத்தி தொடர்பான இருதரப்பு ஒப்பந்தம் மற்றும் இரு தரப்பு வர்த்தகத்தில் இந்திய ரூபாவைப் பயன்படுத்துவதற்கான ஒப்பந்தம் என்பனவே அவையாகும். இந்திய ரூபாவை சர்வதேச மயப்படுத்தும் வகையில் இந்திய அரசாங்கத்தால் 'ரூபே' பணப்பரிமாற்ற அட்டை அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த அட்டை அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் இந்திய ரிசேர்வ் வங்கியின் அனுமதியைப் பெற்று சிங்கப்பூர், பிரிட்டன் ஆகிய நாடுகள் 'ரூபே' ஊடான கொடுக்கல் வாங்கல்களை மேற்கொண்டு வருகின்றன. இலங்கையும் ரிசேர்வ் வங்கியிடம் இது தொடர்பான கோரிக்கையை முன்வைத்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்தப் பயணத்தின்போது, இந்தியாவின் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் ஆகியோரையும் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார். ரணில் இந்தியாவுக்குச் சென்றுள்ள நிலையில், அவரின் கீழ் உள்ள அமைச்சுகளின் பொறுப்புகள், அதன் இராஜாங்க அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. (அ-ம-22-6)

## நம்பிக்கையில்லாத்...

சத்திர சிகிச்சை உபகரணங்களை இறக்குமதிசெய்து, சுகாதாரத்துறையை நலிவடைவதற்கும் உயிரிழப்புகள் ஏற்படுவதற்கும் காரணமாக இருந்தார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே கெஹலியவுக்கு எதிராக நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டுவருவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி நடவடிக்கை எடுத்துள்ளது. இந்தத் தீர்மானத்தில் ஐக்கிய மக்கள் சக்தி நேற்றுக் கையொப்பமிட்டது.

'மக்களது வாக்குகளின் மூலம் நாடாளுமன்றத்துக்கு வந்த ஆளும்கட்சி உறுப்பினர்களுக்கு முதுகெலும்பு இருந்தால் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கையொப்பமிடவேண்டும்' என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவித்தார். (அ-ம)

## 328...

நாட்டின் டொலர் இருப்பைக் கருத்திற்கொண்டு பொருள்களின் இறக்குமதித் தடைகள் வரும் வாரங்களில் படிப்படியாக நீக்கப்படும். வாகன இறக்குமதிக்கு மட்டும் மறுஅறிவித்தல் வரும் வரை தடைநீடிக்கப்படும் என்று முன்னதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையிலேயே 328 பொருள்கள் மீதான இறக்குமதித் தடைகள் நேற்று நீக்கப்பட்டன. (அ-ம)

## தொல்பொருள்...

நேற்றைய கலந்துரையாடலில் திணைக்களத்தினர் பங்கேற்கவில்லை என்பதுடன் மதிப்பீட்டறிக்கையும் சமர்ப்பிக்கவில்லை.

கொக்குத்தொடுவாயில் தண்ணீர்க் குழாய் புதைப்பதற்காக, ஜூன் மாதம் 29ஆம் திகதி வீதிக்கரையில் மண்ணைத் தோண்டியபோது எலும்புக்கூடுகள், ஆடைகள் உள்ளிட்ட மனித எச்சங்கள் மீட்கப்பட்டன. இதனையடுத்து அங்கு கடந்த 6ஆம் திகதி புதைகுழி அகழ்வு முன்னெடுக்கப்பட்டது. இதன்போதும் மேலும் பல எலும்புகள் மீட்கப்பட்டிருந்தன. இதன் அடுத்தகட்டம் தொடர்பில் ஆராய்வதற்காக முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் கடந்த 13ஆம் திகதி கலந்துரையாடல் நடத்தப்பட்டிருந்தது. இந்தக் கலந்துரையாடலில் அகழ்வுப் பணிகளை தொல்பொருள் திணைக்களம் ஊடாக முன்னெடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்குரிய உத்தேச மதிப்பீட்டறிக்கையை சமர்ப்பிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டிருந்தது. அதன் தொடர்ச்சியான கலந்துரையாடல் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் நேற்று நடைபெற்றது. சட்டத்தரணிகள், பொலிஸார், சட்டமருத்துவ நிபுணர்கள் பங்கேற்றனர்.

தொல்பொருள் திணைக்களத்தினர் நேற்றைய கலந்துரையாடலில் பங்கேற்கவில்லை. அத்துடன் மதிப்பீட்டு அறிக்கையும் சமர்ப்பிக்கவில்லை. இந்த நிலையில் புதைகுழி அகழ்வுகளை மேற்கொள்வதற்காக களனி பல்கலைக்கழக பட்டப்பின் படிப்புக்கள் பீடத்தின் தலைவர் ராஜ் சோமதேவ மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேராசிரியர் புஸ்பரட்ணம் ஆகியோர் ஊடாக நேரடி ஆய்வுக் கூட்டறிக்கை ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கு நேற்றுத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அகழ்வுப் பணிகளுக்குரிய நிதிமூலம் இதுவரை கண்டுபிடிக்கப்படாத நிலையில் அது தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றது. முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கு இது தொடர்பான கோரிக்கை முன்வைக்கப்பட்டு அது ஜனாதிபதி செயலகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. இருப்பினும் நிதிமூலம் தொடர்பில் கண்டறிவதற்கும் அடுத்தகட்டம் தொடர்பில் ஆராய்வதற்கும் அடுத்த மாதம் 8ஆம் திகதி மீண்டும் கலந்துரையாடல் நடத்தப்படவுள்ளது. (அ-ம-ஒ,5)

## குளவி...

உயிரிழந்துள்ளார். வேலுப்பிள்ளை சிவஞானம் (வயது - 70) என்பவரே உயிரிழந்தவராவார்.

காணியொன்றை நேற்றுமுன்தினம் துப்புரவுசெய்தபோது, காற்றுக்காரணமாக குளவிக்கூடொன்று கலைந்ததில், நான்கு பேர் மீது குளவிகள் கொட்டியுள்ளன. இதில், வேலுப்பிள்ளை சிவஞானம் சரமாரியான குளவிக் கொட்டுக்கு இலக்கானார். அவர் தர்மபுரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்குமாற்றப்பட்ட நிலையில், மருத்துவமனைக்குச் செல்லும் வழியில் உயிரிழந்தார். இறப்புத் தொடர்பில் தர்மபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். (அ-ம-113)

## தனியார்...

துள்ளது. வடக்கு மாகாணத்தில் சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்துகளில் பயணிகளுக்கு பற்றுச்சீட்டுகள் வழங்காமை, பயணிகளிடம் அதிக கட்டணம் அறவிடல் மற்றும் பயணிகளுக்கு மீதிப் பணம் வழங்காமை ஆகியவை குறித்து அதிகளவில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுகின்றன.

அதற்கமைய எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதி தொடக்கம் வடக்கு மாகாணத்தில் தனியார் பேருந்துகள் திடீர்ப் பரிசோதனைக்குட்படுத்தப்படவுள்ளன.

உள்ளூர் - வெளி மாவட்ட பேருந்துகளில் பயணிக்கும் சகல பயணிகளும் தங்களுக்கு பற்றுச்சீட்டு வழங்கப்படுவதை உறுதிப்படுத்திக்கொள்ளவும். இதுதொடர்பான முறைப்பாடுகளை மக்கள் 021 228 5120 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக முறையிடலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ச)

## ரணிலுக்கு...

இந்திய வெளிவிவகாரத்துறையின் துணை அமைச்சர் வி.முரளிதரன் ரணிலை வரவேற்றதன் பின்னர் இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெய்சங்கரும் ரணிலை வரவேற்றுக் கலந்துரையாடலில் ஈடுபட்டார். (அ-ம)

# சிறுமியுடன் சில்மிஷம்; சிறியதந்தை கைது!

*யாழ்ப்பாணம், ஜூலை 21*

யாழ்ப்பாணம் வலி. வடக்கு பலாலி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் சிறுமியுடன் அங்க சேட்டையில் ஈடுபட்டுவந்த சிறுமியின் சிறிய தந்தை பலாலிப் பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

பலாலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வசித்துவரும் குறித்த சிறுமியின் தந்தை கடற்றொழிலில் ஈடுபட்டு வருகிறார். தந்தை இரவு தொழிலுக்குச் செல்லும்வேளை குறித்த வீட்டுக்குச் செல்லும் தந்தையின் சகோதரனான சிறியதந்தை சிறுமியுடன் அங்க சேட்டையில் ஈடுபட்டு வந்துள்ளார். அந்தப் பகுதியில் சிறுவர் பெண்கள் பிரிவு பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் விழிப்புணர்வு நடவடிக்கை இடம்பெற்ற நிலையில், சிறுமி தனக்கு நடந்த சம்பவத்தை உத்தியோகத்தர்களிடம் தெரியப்படுத்தியுள்ளார். இதுதொடர்பில் பலாலி பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்ட நிலையில் பொலிஸார் சந்தேகநபரான சிறிய தந்தையைக் கைது செய்துள்ளனர். (அ-ம-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் தீர்வை ரணிலிடம் எதிர்பார்ப்பது முட்டாள்தனம்

## அநுர தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 21

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் அரசியல் தீர்வை எதிர்பார்ப்பது முட்டாள்தனமானது என்று ஜே.வி.பி.யின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இந்திய பயணத்துக்கு முன்னர் தமிழ்க் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் நடத்திய சந்திப்புத் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- 'நான் ரணில் ராஜபக்ச அல்ல ரணில் விக்கிரமசிங்கதான் என்று தமிழ் மக்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் ஜனாதிபதி கூறியது நகைப்புக்குரியது. தற்போது ரணில் ராஜபக்ச அரசுதான் ஆட்சியில் உள்ளது. ராஜபக்சக்கள் பட்டாளத்தின் ஆசியில்தான் ஜனாதிபதி கதிரையில் ரணில் இருக்கின்றார். எனவே, ராஜபக்சக்களின் குணாதிசயங்கள் ரணிலிடம் உண்டு. அவரிடம் தமிழ் மக்கள், அவர்களின் பிரதிநிதிகள் தீர்வை எதிர்பார்ப்பது முட்டாள்தனமானது' - என்றார். (அ-ம-22)

# வாகனம் விபத்து இருவர் படுகாயம்

யாழ்., ஜூலை 21

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பட்டமளிப்புக்காக தென்னிலங்கையில் இருந்து வந்துகொண்டிருந்த மகிழுந்து ஒன்று, மீசாலைப் பகுதியில் விபத்துக்குள்ளானதில், வீதியில் ஓரமாக நின்ற இருவர் படுகாயமடைந்தனர். இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

பெண் சாரதியொருவரே காரைச் செலுத்திவந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வீதியோரமாக நின்ற மகேஸ்வரன் நவரஞ்சிதம், பொ.குணசீலன் ஆகியோரே படுகாயமடைந்தனர். அவர்கள் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர். சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(அ-ம-131)


## மணமகள் தேவை

01. மீசாலை - கொடிகாமம். இந்து கௌரவகுலம் (V). 1975. உத்திரட்டாதி. BSc (Colombo), CCNA, CCSP, Network Engineer, Singapore Citizen, மணமகனுக்கு மணமகள் தேவை - பதிவெண் -7549
02. மாவிட்டபுரம் - வண்ணார்பண்ணை. இந்து. கௌரவகுலம் (V). 1975. திருவோணம். Microsoft Sertified System Engineer, UK Citizen, மணமகனுக்கு மணமகள் தேவை - பதிவெண் -7529
03. பருத்தித்தித்துறை. இந்து. கௌரவகுலம் (V). 1971. அனுசம். Dauble Graduate,USA Citizen, மணமகனுக்கு மணமகள் தேவை - பதிவெண் -7428
04. மூளாய் - கொல்லங்கலட்டி. இந்து. கௌரவகுலம் (V). 1975. அத்தம். Graduate, கனடா Citizen, மணமகனுக்கு மணமகள் தேவை - பதிவெண் -6682
05. அளவெட்டி - தெல்லிப்பழை . இந்து. கௌரவகுலம் (V). 1969. திருவோணம். Accounting and Financial Managment, Canada Citizen, மணமகனுக்கு மணமகள் தேவை - பதிவெண் -4878
06. சாவகச்சேரி - நல்லூர். இந்து. கௌரவகுலம் (V). 1967. அவிட்டம். Lab Technician, Swiss Citizen, மணமகனுக்கு மணமகள் தேவை - பதிவெண் -4580
07. கரணவாய் - திருகோணமலை. இந்து. கௌரவகுலம் (V). 1979. ரேவதி. BSc Masters (University of Coventry) UK Citizen, மணமகனுக்கு மணமகள் தேவை - பதிவெண் -3340
08. அல்வாய் - நாவலி. இந்து. கௌரவகுலம் (V). 1967. பூசம். Graduated in USA அமெரிக்கா சிட்டிசன் மணமகனுக்கு மணமகள் தேவை - பதிவெண் - 3316
09. திருநெல்வேலி . இந்து. கௌரவகுலம் (V). 1969. உத்தரம். BSc, UK Citizen, மணமகனுக்கு மணமகள் தேவை - பதிவெண் - 927
10. ஏழாலை. இந்து. கௌரவகுலம் (V). 1977. மகம். Attorny -At - Law, மணமகனுக்கு மணமகள் தேவை - பதிவெண் - 10143
11. தெல்லிப்பழை - உடுவில் . இந்து. கௌரவகுலம் (V). 1982. சித்திரை. Diploma in Computer Network Engineering கனடா Citizen, மணமகனுக்கு மணமகள் தேவை - பதிவெண் - 9962
12. புங்குடுதீவு இந்து. கௌரவகுலம் (V). 1978. பூராடம். BSc,M.Com (Australia) Citizen, மணமகனுக்கு மணமகள் தேவை .

தொடர்புகளுக்கு- - 077 407 2738 077 992 1494 077 803 8193 076 668 8256

S.Sharma J.P Astrologer www.thaalee.com 077 539 3728


## மணமகன் தேவை

01. மீசாலை - புலோலி. இந்து கௌரவகுலம் (V), 1982. உத்திராடம். B.Com, Divorce மணமகளுக்கு மணமகன் தேவை. பதிவெண் - 33265
02. எழுதுமட்டுவாள் - கட்டுவன். இந்து கௌரவகுலம் (V), 1980. பரணி. IT and Accounting (University of Australia) மணமகளுக்கு மணமகன் தேவை. பதிவெண் - 33556
03. வட்டுக்கோட்டை. இந்து கௌரவகுலம் (V), 1984. புனர்பூசம். Business Management, (UK) UK Citizen மணமகளுக்கு மணமகன் தேவை. பதிவெண் - 33794
04. திருநெல்வேலி - கொக்குவில். இந்து கௌரவகுலம் (V), 1982. மிருகசீரிடம். MSc in Manash university in Australia, Divorce, UK Citizen மணமகளுக்கு மணமகன் தேவை. பதிவெண் - 34922
05. வவுனியா. Romancatholic, கௌரவகுலம் (V), 1976. கார்த்திகை. France Citizen, Divorce அழகான மணமகளுக்கு மணமகன் தேவை. பதிவெண் - 33244
06. நல்லூர். இந்து கௌரவகுலம் (V), 1984. ஆயிலியம். Charted Accountant, Divorce, பேரழகான மணமகளுக்கு மணமகன் தேவை. பதிவெண் - 33133
07. கரவெட்டி. இந்து கௌரவகுலம் (V), 1978. உத்திரட்டாதி. BSc (USA), Reading Masters in USA, USA Citizen Divorce மணமகளுக்கு மணமகன் தேவை. பதிவெண் - 33106
08. சுதுமலை - சண்டிலிப்பாய். இந்து கௌரவகுலம். 1994. சுவாதி. CPA, Accountant, Australia Citizen, Divorce மணமகளுக்கு மணமகன் தேவை. பதிவெண் - 33103
09. உடுப்பிட்டி - மூளாய். இந்து கௌரவகுலம் (V), 1981. மிருகசீரிடம். BSc in Computer Science (Peradeniya), Divorce, Singapore Citizen, அழகான மணமகளுக்கு மணமகன் தேவை. பதிவெண் - 33095
10. சாவகச்சேரி. இந்து கௌரவகுலம் (V), 2000. சதயம். HND in Computer Software (esoft) Dip in English அழகான மணமகளுக்கு மணமகன் தேவை. பதிவெண் - 34803
11. அரியாலை - தெல்லிப்பளை. இந்து கௌரவகுலம் (V), 1994. பூராடம். MBBS Doctor, Norway Citizen மணமகளுக்கு மணமகன் தேவை. பதிவெண் - 34889

Whatsapp - 077 992 1494
Phone - 077 408 2837
www.thaalee.com
(CS/51329)AH-1



## மரண அறிவித்தல்



### கந்தையா சரவணமுத்து

கிராம்புவில் சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சரவணமுத்து அவர்கள் கடந்த (19.07.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 23.07.2023 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று பூதவுடல் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
திருமுருகன் விவசாய களஞ்சியம்
077 039 9088
(CR 37286) A-1

## மரண அறிவித்தல்

பிறப்பு 31 . 05 . 1941



இறப்பு 20 . 07 . 2023

### திருமதி பத்மாவதி சண்முகசுந்தரம்

சங்கானையைப் பிறப்பிடமாகவும், திருநகர் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்மாவதி சண்முகசுந்தரம் நேற்று (20.07.2023) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சட்டநாதஐயர் - காமாட்சி அம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரக்குருக்கள் - விசாலாட்சி அம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், திரு.சோ.சண்முகசுந்தரத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தையல்நாயகி, சண்முகநாதன் ஆகியோரின் சகோதரியும், நாகேந்திரராஜா, விஜஜேந்திரராஜா, ராஜேந்திரபிரசாத், தயாபரன், காலஞ்சென்ற சசிதரன் மற்றும் விக்னேஸ்வரன், கௌரி மனோகரி ஆகியோரின் அன்புத் தாயாரும், பிரியா, விஜிதா, கௌரி, பிரேமகலா, உமாசுதா, உமாசங்கர் ஆகியோரின் அன்பு மாமியாரும், நிவாசி, அபிசன், நிதன், சஞ்சீவன், சயந்தன், கௌசல்யன், மதுமிதன், அபூர்வன், அக்சிதா, ஆர்த்திகா, நிதுசன், வைசினிகா, வைசாளி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.07.2023) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் திரேசம்மா கோவிலடி, A9 வீதி, கிளிநொச்சி என்னும் முகவரியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருநகர் இந்து மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

திரேசம்மா கோவிலடி,
A9 வீதி, கிளிநொச்சி.

தகவல்:
குடும்பத்தினர்.

பிரசாத் (ஐயா) - 077 711 6090, முரளி - 077 758 4409,
விக்னா - 077 447 4294
(22397)AH-1




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.07.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org